## August 25, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழ்நாட்டின் எந்தப் பகுதியிலும் ஹைட்ரோ கார்பன் திட்டத்துக்கு அனுமதி தரப்படாது என்று நிதி மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு உறுதிபடத் தெரிவித்தார்.
   i. மத்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கைஎரிவாயு அமைச்சகம், கடந்த 2011-இல் தமிழகத்தின் காவிரி டெல்டா மண்டலத்தில் பெட்ரோலியத்துக்கு மாற்று எரிபொருளாகப் பயன்படுத்தக் கூடிய மீத்தேன், ஹைட்ரோகார்பன் எடுக்க ஆய்வு செய்வதற்கான முயற்சியைத் தொடங்கியது.
   ii. மீத்தேன், ஹைட்ரோ கார்பன் எரிவாயுத் திட்டத்தால் விவசாயம், கடல்வளம் பாதிக்கப்படும் என்பதால் இதற்கு கடும் எதிர்ப்பு எழுந்தது. விவசாயிகள், சமூக ஆர்வலர்கள், அனைத்து அரசியல் கட்சிகளின் எதிர்ப்பைத் தொடர்ந்து ஆய்வு முயற்சி கைவிடப்பட்டது. இருப்பினும் இந்தத் திட்டங்கள் குறித்து டெல்டா விவசாயிகளிடையே அச்சம் நிலவி வந்தது.
   iii. இந்நிலையில், இந்திய எண்ணெய் மற்றும் எரிவாயுக் கழகமானது ராமநாதபுரம் மாவட்டத்தில் ஹைட்ரோ கார்பன் எண்ணெய்க் கிணறுகளை அமைக்க முடிவு செய்தது. அதன்படி, 20 இடங்களில் 2,000 முதல் 3,000 மீட்டர் ஆழத்துக்கு துளைகளை இடுவதற்கு தீர்மானித்துள்ளது. குறிப்பாக, காவனூர், காமன் கோட்டை, சிறுவயல், ஏ.மணக்குடி, சீனாங்குடி, பேய்குளம், உள்ளிட்ட கிராமங்களை மையப்படுத்தி கிணறுகளை அமைக்கத் தீர்மானித்துள்ளது.
   iv. இதற்காக, மாநில அரசின் ஒப்புதலைக் கோரியது. இதற்கு, மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையமானது அனுமதி அளித்துள்ளது. இது ராமநாதபுரம் மாவட்டத்தை பொதுமக்கள் மற்றும் சுற்றுச் சூழல் ஆர்வலர்களி டையே கடும் அதிருப்தியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது. இதனால், நிலத்தடி நீர் மாசுபடுவதுடன், வேளாண்மையும் பாதிக்கப்படும் என அவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். அத்துடன், உடல்நலனுக்கும் பாதிப்பு ஏற்படும் என்கின்றனர்.
   v. இந்நிலையில், தமிழ்நாட்டின் எந்தப் பகுதியிலும் ஹைட்ரோ கார்பன் திட்டத்துக்கு அனுமதி தரமாட்டோம் என்று தமிழ்நாடு அரசின் நிதி மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

2. ககன்யான் திட்டத்தில் விண்வெளி வீரர்கள் பூமிக்குத் திரும்பும் விண்கலத்தின் வேகத்தைக் குறைத்து, அவர்களை பாதுகாப்பாகத் தரையிறக் குவதற்கு முக்கியமான பாராசூட் அமைப்பின் முதல்கட்ட சோதனை (ஐஏடிடி-01) வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டதாக இஸ்ரோ அறிவித்தது.

i. மனிதர்களை விண்வெளிக்கு அழைத்துச் செல்லும் ககன்யான் திட்டம், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) கனவுத் திட்டமாகும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்திய விமானப் படையின் சுபான்ஷு சுக்லா, பிரசாந்த் நாயர், அஜித் கிருஷ்ணன், அங்கத் பிரதாப் ஆகிய 4 குரூப் கேப்டன்கள் விண்வெளி வீரர்களாகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளனர்.

ii. இவர்களில் மூவர் 400 கி.மீ. உயரத்தில் புவியின் தாழ்வான சுற்றுவட்டப்பாதைக்கு அனுப்பிவைக்கப்படுவர். அவர்கள் அங்கு மூன்று நாள்கள் தங்கி, பல்வேறு ஆய்வுப் பணிகளை மேற்கொள்வர். பின்னர், மீண்டும் பூமிக்குத் பாதுகாப்பாகத் திரும்புவார்கள்.

iii. இதன்மூலம், அமெரிக்கா, ரஷியா, சீனாவுக்குப் பிறகு சொந்த விண்கலத்தில் மனிதர்களை வெளிக்கு அனுப்பிய உலகின் நான்காவது நாடாக இந்தியா உருவாகும்.

iv. ககன்யான் வீரர்கள் கடந்த சில ஆண்டுகளாக கடுமையான பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர். ககன்யான் வீரர்களில் ஒருவரான சுபான்ஷு சுக்லா, அனுபவப் பயிற்சிக்காக 'ஆக்ஸி யம்-4' திட்டத்தின்கீழ் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அண்மையில் வெற்றிகரமாகச் சென்று திரும்பியது குறிப்பிடத்தக்கது.

v. ககன்யான் திட்டத்தின் முதல் ஆளில்லா சோதனை பயணம் நிகழாண்டு இறுதியில் திட்ட மிடப்பட்டுள்ளது.

3. இந்தியா வின் பாதுகாப்புத் துறையில் ஒரு புதிய மைல்கல்லாக, உள்நாட்டி லேயே உருவாக்கப்பட்ட ஒருங் கிணைந்த வான் பாதுகாப்பு ஆயுத அமைப்பு(ஐ.ஏ.டி.டபிள் யூ.எஸ்.), ஒடிஸா கடற்கரையில் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.

i. பாதுகாப்பு அமைச்சகத்தின் அறிக்கையின்படி, இந்த ஐ.ஏ.டபிள்யூ.எஸ். அமைப்பில் விரைந்து எதிர்வினையாற்றும் தரையிலிருந்து வானில் பாயும் ஏவுகணைகள் (கியூ.ஆர்.எஸ்.ஏ. எம்.), குறுகிய தொலைவு வான் பாதுகாப்பு அமைப்பு (வி.எஸ். எச்.ஓ.ஆர்.ஏ.டி.எஸ்.),உயர் ஆற்றல் லேசர் ஆயுதங்கள் (டி.இ. டபிள்யூ.) ஆகியவை ஒருங்கி ணைக்கப்பட்டுள்ளன.

ii. இந்த நவீன ஆயுதங்கள் அனைத்தும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் (டிஆர்டிஓ) உருவாக்கப்பட்ட ஒரு மையப்படுத்தப்பட்ட கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தால் நிர்வ கிக்கப்படுகின்றன. இந்த மையம் அனைத்து ஆயுத அமைப்புகளையும் ஒருங்கிணைத்து ஒரே நேரத்தில் செயல்பட அனுமதிக்கிறது.

iii. ஒடிஸா, சண்டிபூர் சோதனை தளத்தில் சோதனை நடைபெற்றது.

iv. சோதனையின் போது இரண்டு அதிவேக ஆளில்லா விமானங்கள் மற்றும் ஒரு மல்டி-காப்டர் ட்ரோன் ஆகிய மூன்று வெவ்வேறு இலக்குகள் ஒரே நேரத்தில் தாக்கி அழிக்கப்பட்டன.

v. இந்த இலக்குகள் வெவ்வேறு தூரங்களிலும் உயரங்களிலும் பறந்தன. சோதனையில் அனைத்து கூறுகளும் எந்தவித தவறும் இல்லாமல் செயல்பட்டு, இலக்குகளை துல்லியமாக தாக்கியதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது.

4. அமெரிக்காவும், தென்கொரியாவும் கூட்டு போர்ப் பயிற்சியில் ஈடுபட்டுள்ள நிலையில், புதியவகை வான்பாதுகாப்பு ஏவுகணைகளின் சோதனையை வடகொரியா நடத்தியது.
   i. இந்த ஏவுகணைகள், சிறியரக ஆளில்லா விமானங்கள் (ட்ரோன் கள்) மற்றும் 'க்ரூஸ்' ஏவுகணைகள் போன்ற வான்வழித் தாக்குதல்களைத் திறம்பட எதிர்கொள்ளும் ஆற்றல் கொண்டவை என வடகொரிய அரசின் செய்தி நிறுவனமான 'கேசிஎன்ஏ தெரிவித்தது.
   ii. தென்கொரியாவின் புதிய அதிபர் லீ ஜே மியங், டோக்கியோவில் ஜப்பான் பிரதமரைச் சந்தித்து, வடகொரியாவின் அணு ஆயுத இலக்குகளை எதிர்கொள்வது குறித்து அமெரிக்காவுடன் முத்தரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதாக உறுதியளித்துள்ள சூழலில், இந்த ஏவுகணை சோதனை நடைபெற்றுள்ளது.

5. கஜகஸ்தானின் ஷிம்கென்ட் நகரில் 16-ஆவது ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் ஆடவர் 50 மீ ரைஃபிள் பிரிவில் 462.5 புள்ளிகளுடன் முதலிடம் பெற்று ஐஸ்வரி பிரதாப் தங்கம் வென்றார்.

6. புலி, பனி சிறுத்தை, சிறுத்தை ஆகிய விலங்கினங்கள் காணப்படும் நிலப்பரப்பைக் கொண்ட நேபாளம், ஐபிசிஏ-இல் இணைந்திருப்பது பெரிய பூனை இனங்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்தும் என ஐபிசிஏ தெரிவித்துள்ளது.
   i. நேபாளத்தில் கடந்த 2009-இல் வெறும் 121 புலிகள் இருந்த நிலையில், இறுதியாக 2022-இல் மேற்கொண்ட கணக்கெடுப்பின்படி அவற்றின் எண்ணிக்கை 355-ஆக அதிகரித்துள்ளது.
   ii. ஐபிசிஏ என்பது புலி, சிங்கம், சிறுத்தை, பனி சிறுத்தை, ஜகுவார், சிவிங்கி புலி, பூமா ஆகிய 7 பெரிய பூனை இனங்களைப் பாதுகாக்க 90-க்கும் மேற்பட்டநாடுகள்,பலதரப்பு அமைப்புகள் அங்கம் வகிக் கும் கூட்டணியாகும்.
   iii. பிரதமர் நரேந்திர மோடி கர்நாடக மாநிலம் மைசூரில் கடந்த 2023, ஏப்.9-இல் இந்தக் கூட்டணியைத் தொடங்கி வைத்தார்.

7. கரோனா பெருந்தொற்று காரணமாக நிறுத்தப்பட் டிருந்த இந்தியா-சீனா இடையே யான எல்லை தாண்டிய வர்த்த கம், ஹிமாசல பிரதேசத்தில் உள்ள ஷிப்கிலா கணவாய் வழியாக மீண் டும் தொடங்க சீனா கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

8. மத்திய ரிசர்வ் காவல் படை (சிஆர்பிஎஃப்) மற்றும் இந்தோ-திபெத் எல்லை காவல் படையின் (ஐடி பிபி) முன்னாள் இயக்குநர் அனிஷ் தயாள் சிங்கை தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகராக மத்திய அரசு நியமித்துள்ளது.
9. உக்ரைனின் வான்பாதுகாப்பு அமைப்புகளுக்காக 7 பில்லியன் குரோனர் (695 மில் லியன் டாலர்) ஒதுக்கீடு செய்வதாக நார்வே அறிவித்தது.
   i. ஏவுகணைகள் உள்பட இரு வான்பாதுகாப்பு அமைப்புகளுக்கு நார்வே மற்றும் ஜெர்மனி இணைந்து நிதி வழங்கும் என்றும் வான்பாதுகாப்பு ரேடாரைக் கொள்முதல் செய்ய உக்ரைனுக்கு நார்வே உதவி செய்து வருவதாகவும் அந்நாட்டு பிரமர் ஜோனஸ் காஹர் ஸ்டோ தெரிவித்தார்.

10. **செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-**

   i. மார்டன் புஸ்கோவிஸ் - ஹங்கேரிய டென்னிஸ் வீரர்
   ii. டயனா ஷினைடர் - ரஷ்ய டென்னிஸ் வீரர்